இந்து தமிழ் திசை - 01.02.2023



↑ அவிநாசிலிங்கம் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்ற மாணவிகள்.

# பிரின்டிங் துறையில் வேலைவாய்ப்பு கருத்தரங்கம்

**கோவை**

கோவை அவிநாசிலிங்கம் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் கீழ் துடியலூரை அடுத்த வரப்பாளையத்தில் செயல்பட்டுவரும் கல்லூரியின் பிரின்டிங் பொறியியல் தொழில்நுட்ப பிரிவு சார்பில் மாணவிகளுக்கான வேலைவாய்ப்பு குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், புதுச்சேரி இன்டேகரா சாப்ட்வேர் சர்வீஸ் நிறுவனத்தின் சிஓஓ எம்.வெங்கடேசன், பிரீ-மீடியா துறையில் உள்ள வாய்ப்புகள், வேலைவாய்ப்புக்கு தேவையான தகுதிகள் குறித்து பேசினார். சென்னை எஃப்ஜஎஸ் குளோபல் பிசினஸ் சொல்யூசன் நிறுவனத்தின் புராஜெக்ட் மேனேஜர் ஸ்பெசலிஸ்ட் எஸ்.ஜான்சன் சாமுவேல் இணையவழியாக கலந்துகொண்டு, நேர்முகத் தேர்வை எப்படி எதிர்கொள்வது, தகவல்தொடர்பு திறன்களை வளர்த்துக்கொள்வது குறித்து பேசினார்.

மேலும், மாணவிகளின் சந்தேகங்கள், கேள்விகளுக்கு நிபுணர்கள் விளக்கம் அளித்தனர்.